தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 15, திருவள்ளுவர் ஆண்டு – 2045

2014 ஜூலை 31, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஏரினும் நன்றால் எருஇடுதல்; கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு."

ஏர் உழுவதைவிட எரு இடுதல் மிக முக்கியம். களை பறித்தபின் நீர் பாய்ச்சுவதைவிட முக்கியமானது வளரும் பயிர்கள் பூச்சிகளாலும், இயற்கை நிகழ்வுகளாலும் அழியாமல் பாதுகாத்தல் ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 285, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

285—

தூர்வாருதல்

***14510—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, அ.வல்லாளப்பட்டி பகுதியிலுள்ள நீர்நிலைகளைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மேலூர் தொகுதி, அ.வல்லாளப்பட்டி கிராமத்தில் 18 கண்மாய்கள் உள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் வருடாந்திரப் பராமரிப்பு நிதியின்கீழ், கடந்த 3 ஆண்டுகளில் 3 கண்மாய்கள், வரத்துக் வாய்க்கால்கள் மற்றும் உபரி வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டு உள்ளன என்பதனையும், வரும் நிதியாண்டுகளில் மீதமுள்ள கண்மாய்களைத் தூர்வார முன்னுரிமை அளிக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். எங்களுடைய ஜீவநாடி, உயிர் நாடிப் பிரச்சினையான முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையைத் தீர்த்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விவசாயிகளுடைய விடிவெள்ளியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அ. வல்லாளப்பட்டி பேரூராட்சிப் பகுதியில் பல்வேறு கண்மாய்கள், குளம், குட்டைகள் இருக்கின்றன. மேலூர் தொகுதியிலுள்ள மக்கள் அனைவரும் விவசாயத்தை நம்பியே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு பகுதியில் முல்லைப் பெரியாறு அணையின்மூலம் பெறும் தண்ணீரை வைத்தும், மற்றொரு பகுதியில், மழைக் காலங்களில் பெய்கின்ற மழைத் தண்ணீரை கண்மாய்களில் தேக்கி வைத்தும் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். மேலூர் தொகுதியின் விவசாயத்தைப் பற்றி மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முழுமையாக நன்றாக அறிந்தவர். அ. வல்லாளப்பட்டி பகுதிக்கு அருகில் சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவில் கள்ளழகர் குடிகொண்டுள்ள அழகர் மலை இருக்கின்றது. அழகர் மலையில் பெய்கின்ற மழை*

2014 ஜூலை 31]

நீரின் ஒரு பகுதி மேலூர் பகுதிக்கும், பின்புறம் பெய்கின்ற மழை நீர் நத்தம் பகுதிக்கும் சென்றடைகின்றது. இந்தப் பகுதிகளிலுள்ள கண்மாய்களைத் தூர்வாரிக் கொடுத்தால், அழகர் மலையில் பெய்கின்ற மழைத் தண்ணீரை, அந்தக் கண்மாய்களில் தேக்கி வைத்து, ஆயிரக்கணக்கான விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். வல்லாளப்பட்டி பேரூராட்சி மட்டுமல்லாமல், பக்கத்திலுள்ள மலையைச் சுற்றியிருக்கின்ற பல்வேறு கிராமங்கள் விவசாயத்தை நம்பி இருக்கின்றன. அ. வலையபட்டி ஊராட்சி, கிடாரிபட்டி ஊராட்சி, அரிட்டாபட்டி ஊராட்சி, கள்ளம்பட்டி ஊராட்சி, சூரக்குண்டு ஊராட்சி, புதுசுக்காம்பட்டி ஊராட்சி, எட்டிமங்கலம் ஊராட்சி, சென்னகரம்பட்டி ஊராட்சி, மேலவளவு ஊராட்சி, கேசம்பட்டி ஊராட்சி, புலிப்பட்டி ஊராட்சி என பல்வேறு ஊராட்சிகள் இந்த மலையைச் சுற்றியிருக்கின்றன. இந்தப் பகுதிகளிலுள்ள கண்மாய்களைத் தூர்வாரிக் கொடுத்தால், மழைக்காலங்களில் பெய்கின்ற தண்ணீரை, அந்தக் கண்மாய்களில் தேக்கி வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பாக இருக்கும். எனவே, அந்தப் பகுதிகளைப் பற்றி நன்றாக அறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அந்தக் கண்மாய்களைத் தூர்வார நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளில் அன்னியன் கண்மாய், இலுப்பக்குடி கண்மாய், பீக்கன்குளம் கண்மாய் ஆகிய மூன்று கண்மாய்கள் தூர்வாரப்பட்டு நல்ல நிலைமையில் உள்ளன. நான் குறிப்பிட்ட 18 கண்மாய்களில் ஏற்கெனவே 3 கண்மாய்கள் நல்ல நிலைமையில் உள்ளன. 2014-2015 ஆம் ஆண்டின், வருடாந்திரப் பராமரிப்பு நிதியின்கீழ் மருதங்குடி கண்மாயை ஆழப்படுத்தி, தூர்வார முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதனையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள் குறிப்பிட்ட நீண்ட பட்டியலிலுள்ள அத்தனை கண்மாய்களையும் தூர்வார மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, எல்லா பட்டியல்களையும் சொல்லிவிட்டீர்கள். இன்னொரு துணைக் கேள்வி கேட்க வேண்டுமா?*

முற்பகல் 10-05

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்துக்கு எடுத்துச்சென்று மேலூர் தொகுதியிலே இருக்கின்ற பல்வேறு கண்மாய்கள் தூர்வாரித் தரப்படும் என்று தெரிவித்ததற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலூர் பகுதி, முல்லைப் பெரியாறு பிரதானக் கால்வாயை நம்பி விவசாயம் செய்து கொண்டிருக்கும் பகுதி. முல்லைப் பெரியாறு பிரதானக் கால்வாய் மற்றும் கிளைக் கால்வாய்கள், 30 ஆண்டுக்காலமாகப் பல்வேறு ரூட்டுகளுக்கான கால்வாய்கள் சரி செய்யப்படாமல் இருக்கின்றன. இதனை விவசாயிகளுடைய விடிவெள்ளியாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பெரியாறு பிரதானக் கால்வாயிலிருந்து கிளைக் கால்வாய்களைச் சரி செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு பிரதானக் கால்வாயில் 12 கிளை வாய்க்கால்கள் இருக்கின்றன. அதில் 7-வது கிளை வாய்க்காலும், 10-வது கிளை வாய்க்காலும் நல்ல நிலையில் இருக்கின்றன என்று அறிக்கை வரப்பெற்றிருக்கிறது. பிரதான வாய்க்காலில் இருக்கின்ற மீதமுள்ள கிளை வாய்க்கால்கள் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட சூழ்நிலையில், பிரதான வாய்க்காலிலிருந்து பிரிந்து செல்லும் கிளை வாய்க்கால்களினுடைய நிலைமையினை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகம் முழுவதும் இருக்கும் கடுமையான வறட்சியின் காரணமாக நிலத்தடி நீர் மிகவும் கீழே போயிருக்கிறது. என்னுடைய தொகுதிக்குட்பட்ட மங்களூர் ஏரி, வீரன்வயல் ஏரி, மேலப்பெருமலை ஏரிகளைத் தூர் வாருவதோடு, ஆறுகளில் 2 அல்லது 3 கிலோ மீட்டர் நீளமும், 3 அல்லது 4 கிலோ மீட்டர் அகலமும் உள்ள படுகையில் ஏரியை வெட்டிக் கொடுத்தால் நிலத்தடி நீரைப் பாதுகாக்க முடியும். ஆகவே, அந்தவகையில் மங்களூர், வீரன்வயல், மேலப்பெருமலை ஏரிகளைத் தூர்வாரவும், சால்வனாற்றின் படுகையில் புதிதாக ஏரி அமைத்துத் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியின் காரணமாகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். வறட்சியின் காரணமாக எங்கள் பகுதியில் நிலத்தடி நீர் மிகவும் குறைந்திருக்கின்றது. எனவே, பட்டுக்கோட்டை தொகுதியிலே இருக்கக்கூடிய மிகப்பெரிய ஏரிகளான செல்லிக்குறிச்சி ஏரி, அமரிகுளம் ஏரி, பிச்சினிகாடு ஏரி போன்ற ஏரிகளைத் தூர்வாரி, வருங்காலத்தில் வரக்கூடிய மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய அளவிற்குத் திட்டங்களைக் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2014 ஜூலை 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீரைச் செறிவூட்டுவதற்காகத்தான் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட உகந்த இடங்களில் தடுப்பணைகள் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதன்படி பல்வேறு தடுப்பணைகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், பல்வேறு தடுப்பணைகள் கட்டும் பணிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கராஜன் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஏரிப் பகுதியில், நிலத்தடி நீர் செறிவூட்டப்படுவதற்கு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 286, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

286—

புதிய மின்மாற்றி

***33867—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சருகணி ஊராட்சி, நாகமதி கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சருகணி ஊராட்சி, நாகமதி கிராமத்தில் ஆரோக்கிய நகர் எஸ்.எஸ்.3-100